பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஐப்பசி 04 புதன்கிழமை (20 10 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 326

# அரச படைக்கு 3 ஹெலிகள் மற்றும் நவீன ஆயுதங்கள் கொள்வனவு

## கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வருட இறுதியில் வந்து சேரும்

கொழும்பு, ஒக்டோபர் 20

இராணுவப் போக்குவரத்துக்கான பாரிய ஹெலிக்கொப்டர்கள் மூன்று உட்பட பெருமளவு ஆயுத தளபாடங்களை கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து கொள்வனவு செய்ய ஸ்ரீலங்கா அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது இவை இவ்வருட இறுதியில் கொழும்புக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கிழக்கு ஐரோப்பிய தயாரிப்பான எம். ஐ - 17 IV ரக இராணுவ போக்குவரத்து ஹெலிக்கொப்டர்களைக் கொள்வனவு செய்வது என்று பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்துள்ளது.

இவ்வருட முடிவுக்குள் மூன்று எம். ஐ - 17 IV ஹெலிக்கொப்டர்கள் கொழும்பு வந்து சேரும் என்று பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" தகவல் வெளியிட்டிருக்கிறது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் இருந்து கடுதாசன

(6 ஆம் பக்கம் பார்க்க

## 2 கப்பல்களில் மண்ணெண்ணெய்

### உடன் அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். மாவட்டத்துக்கு உடனடியாக இரு கப்பல்களில் மண்ணெண்ணெய் அனுப்ப கொழும்பில் ஏற்பாடுகள் செய்யப்படுவதாக கொழும்பு தகவல்கள் தெரிவித்தன.

குடாநாட்டு மக்களின் பாவனைக்காக அவசரமாக 'ருஹுணு', "நிமிகி" ஆகிய இருகப்பல்கள் மூலம் மண்ணெண்ணெய் அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் —

தற்சமயம் கொழும்பு துறைமுகத்தில் பொருட்கள் ஏற்றிக்கொண்டு நிற்கும் 'குணா' வடக்கே புறப்பட்டதும், இவ்விரு கப்பல்களில் மண்ணெண்ணெய் ஏற்றும் பணி ஆரம்பிக்கும் எனவும் — தெரிவிக்கப்பட்டது (உ-3)

## ஜனாதிபதி விஜேதுங்காவுடன் யாழ். அரச அதிபர் பேச்சு

யாழ்ப்பாணம், ஒக் 20

யாழ். மாவட்ட மக்கள் எதிர்நோக்கும் பல்தரப்பட்ட பிரச்சினைகள் குறித்து கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர், ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்காவுடன் கடந்த வாரம் பேச்சுக்கள் நடத்தியதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

உணவு மற்றும் அத்தியாவசியப்பொருட்களின் நிலைமை, விமானக் குண்டு வீச்சால் மக்கள் அனுபவிக்கும் கஷ்டங்கள் உட்பட மற்றும் பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியதாக தெரியவந்தது.

பாதுகாப்பு அமைச்சு செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வணசிங்காவுடனும் அரச அதிபர் பேச்சுக்கள் நடத்தியுள்ளார் என தெரியவந்தது. (உ-3)

## ராணுவத் தளபதியை கொல்ல புலிகளின் அணி கொழும்பில்!

### 'பஜரோ ஸ்குவாட்' தற்கொலைப் படை ஊடுருவலாம்

கொழும்பு, ஒக். 20

இராணுவத் தளபதியைக் கொலை செய்யும் நோக்கத்துடன் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் கொழும்புக்குள் ஊடுருவி அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்

— இவ்வாறு நம்பிக்கையான தகவல்கள் கிடைத்திருப்பதாக சிங்கள வார இதழான "லக்திவ" செய்தி வெளியிட்டிருக்கிறது.

சுமார் 15 பேர் அடங்கிய விடுதலைப்புலிகளின் 'பஜரோ ஸ்குவாட்" (பஜரோ அணி) என்ற படைப்பிரிவே இந்த நோக்கத்துக்காக கொழும்பு வந்துள்ளது

இந்த அணியினர் — இராணுவத் தளபதியின் நடமாட்டம், அவர் நடமாடும் இடங்கள், அவரது அலுவலகம் ஆகியவற்றையும், தளபதிக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் அவதானித்து வருவதாகவும் —

கொட்டாஞ்சேனை, இரத்

(3 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மத்திய கல்லூரிக்கு சமீபமாக விழுந்த ஷெல்கள்

மண்டைதீவு இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட இரண்டு ஷெல்கள் நேற்று முற்பகல் 11 15 மணியளவில் — யாழ். மத்திய கல்லூரிக்கு அண்மையில் — சுப்பிரமணியம் பூங்கா பகுதியில் — அடுத்தடுத்து விழுந்து வெடித்தன.

ஷெல் சிதறல்கள் பல யாழ். மத்திய கல்லூரிக்கும் வேம்படி மகளிர் கல்லூரிக்கும் இடையில் உள்ள வீதி வரை — பாதுகாப்பு வலயத்துக்குச் சமீபமாக — வந்து விழுந்தன. சிதறல்கள் விழுந்ததால் யாழ் மத்திய கல்லூரி மண்டப ஓடுகள் பல உடைந்தன.

இரண்டு கல்லூரிகளிலும் வகுப்புகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் ஷெல்கள் வெடித்ததால் மாணவர் பாதுகாப்புக் கருதி அவை உடனடியாக மூடப்பட்டன. (அ-5-17-15-51

லண்டன்
"தமிழ் நேஷன்"
பத்திரிகைக்கு
தொண்டா
அளித்த பேட்டி
2 ஆம் பக்கத்தில்

## அரசியல் உபாயத்தை அமுல் செய்ய கிளாலியிலிருந்து படை வாபஸ்!

### ராணுவத் தளபதி கூறுகிறார்

கொழும்பு, ஒக். 20

கிளாலியில் இருந்து படையினர் வாபஸானது அரசியல் உபாயம் ஒன்றை அமுல் நடத்துவதற்காக எடுக்கப்பட்ட இராணுவ முடிவேயாகும்.

இராணுவத் தளபதி இசிக் வத்தியரத்தின "சண்டே டைம்ஸ்க்கு" அளித்தபேட்டி ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'கிளாலி ஏரியூடாக படகு போக்குவரத்து நடமாட்டம் இன்னமும் இருக்கிறதாகக் கூறப்படுகிறதே. அது எப்படி?' — என்ற கேள்விக்கும் பதிலளிக்கையில் —

"கிளாலிக்கும் குஞ்சுப்பரந்தனுக்கும் இடையில் அப்படியான ஒரு படகு நடமாட்டமும் இல்லை என்பதே எமது நிலைப்பாடாகும்.

"இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் எமக்கு தெரிவித்திலும் பார்க்க கொழும்பில் உள்ள உங்களுக்கு அதிகம் தெரிந்திருக்குமானால் தேசாபிமானி போன்று அது பற்றிய

6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழக மீனவர் தாக்கப்பட்ட விவகாரம்:

## இலங்கை-இந்திய உறவுகளை குலைப்பதில் புலிகள் வெற்றி!

### "சண்டே ஐலண்ட்" வாரஇதழ் கருத்து

கொழும்பு, ஒக். 20

வடபகுதிக் கடல் போக்குவரத்தைத் தடை செய்வது என்ற இலங்கை ஒருதலைப்பட்சமாக எடுத்த முடிவைத் தொடர்ந்து —

இலங்கை, இந்திய அரசாங்கங்களுக்கு இடையே பாரதூரமான கருத்து வேறுபாட்டை தோற்றுவிப்பதில் விடுதலைப் புலிகள் வெற்றி பெற்று விட்டார்கள் என்று தெரிகிறது.

தாம் விரும்பியதை விடுதலைப் புலிகள் அடைந்து விட்டார்கள் — இரண்டு அரசுகளுக்கு இடையேயான கருத்து வேற்றுமையை உருவாக்கி விட்டார்கள்.

—இவ்வாறு அரசியல் பகுப்பாய்வாளர் ஒருவர் கூறியதாக "சண்டே ஐலண்ட்" தக

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் படகுகளுடன் மோதலைத் தவிர்க்குக!

### கடற்படைக்கு உத்தரவு

கொழும்பு, ஒக். 20

வடபகுதிக் கடல் பிராந்தியத்தில் இந்திய மீன்பிடிப் படகுகளுடன் அல்லது இந்தியக் கடற்படைப் படகுகளுடன் தேவையற்ற மோதலை தவிர்த்துக் கொள்ளும்படி கடற்படை உயர் கட்டளைப் பீடம், வடபகுதி கடலில் பணியில் ஈடுபட்டுள்ள ஸ்ரீலங்கா கடற்படைப் படகுகளின் கட்டளைத் தளபதிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்பு அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி "சண்டே ஐலண்ட்" இச்செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இந்த புதிய உத்தரவு பற்றிய விவரங்களை வெளியிட அந்த அதிகாரி மறுத்துவிட்டார்.

இந்திய மீனவர் மீது ஸ்ரீலங்கா கடற்படையினர் கண்மூடித்தனமாக தாக்குதல் நடத்தியதாக இந்திய அரசு குற்றஞ்சாட்டியதைத் தொடர்ந்து ஸ்ரீலங்கா கடற்படை தலைமையகம் இந்த உத்தரவை விடுத்திருக்கிறது.

## சுவீடன் அதிகாரிகள் வருகை

கொழும்பு, ஒக் 20

சுவீடனில் உள்ள இலங்கை அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான சூழ்நிலை இலங்கையில் இருக்கிறதா என்பதை கண்டறிய அந்த நாட்டின் உயர்நிலை அதிகாரிகள் குழு ஒன்று இலங்கை வந்துள்ளது.

தங்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என்று கூறி சுமார் 180 இலங்கைத் தமிழ் அகதிகள் சுவீடனில் ... இருந்து வருகின்றனர் ... (உஎ)

## ராஜீவ் கொலை வழக்கு விசாரணை மீண்டும் ஆரம்பம்

சென்னை, ஒக். 20

சுமார் இரண்டு மாதங்களாகத் தடைப்பட்டிருந்த ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணை, பூந்தமல்லி விசேட நீதிமன்றத்தில் இன்று மீண்டும் ஆரம்பமாக உள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இனியும் விசாரணையை ஒத்திப்போட முடியாது என்று சிறப்பு நீதிவான் எஸ். எம். சித்திக் கூறியிருக்கிறார்.

பூந்தமல்லி நீதிமன்றத்தில் வாரிசையாளர்கள் அறையில் கண்ணாடித்தடுப்பு அமைக்கப்பட்டதை எதிரிகள் ஆட்சேபித்தனர்.

அத்தடுப்புகளால் தாம் தமது வழக்கறிஞர்களுடன் பேசமுடியாதிருப்பதாகத் தெரிவித்து நீதிமன்ற அமர்வுகளை எதிரிகள் பகிஷ்கரித்து வந்தனர்.

இம் முறைப்பாடு தொடர்பாக சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள் டி. என். அருணாசலம், டி. ராஜீ ஆகியோர் நேற்று நேரில் பூந்தமல்லி சென்று சர்ச்சைக்குரிய தடுப்புகளைப் பார்வையிட்டனர்.

இது குறித்த உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒரிரு நாட்களில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது

எதிரிகள் நீதிமன்றம் வரவேண்டும் என்று இதுவரை வற்புறுத்தி வந்த வாதிகள் தரப்பு, இப்போது எதிரிகள் நீதிமன்றம் வராத நிலையில் வழக்கு விசாரணையை தொடரலாம் என்ற நிலைக்கு வந்துள்ளதாம்.

29 மாதங்களாக நடந்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

தமிழனே!
உரிமைக்காக உயிர் கொடுப்பது
உன்னதமானது.
விடுதலைக்கான வித்தாக விழுவது
வீரியம் மிக்கது.
வா தமிழா!
உனக்கும் ஒரு வரலாறு இருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 94
## DAY CLASSES
(வர்த்தக பிரிவு)
ஆரம்பமாகியுள்ளது
எமது வழமையான
ஆசிரியர்கள்
**SHAMROCK**
யாழ். கண்டிக்குளி.
(27715)



## துரித மீட்டல்
(கணிதம்)
ஆரம்பம்: 23·10·93
வெள்ளி பி.ப. 1.00 மணி
பிரத்தியேக
கணித வகுப்பு
60/8,
இந்துக்கல்லூரி ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
கணிதம்
**காசி**
கிழமையில் 6 நாட்கள்
நடைபெறும்.
(சி/6422)


பண்டா, ஜே. ஆர்., பிரேமா எல்லோரும் ஒரேமாதிரியானவர்களே!

# தமிழர்களின் உரிமைகளை வழங்க சிங்கள தலைவர்கள் விரும்பவில்லை

## உண்மை நிலை இதுதான் என்கிறார் அமைச்சர் தொண்டா

கொழும்பு, ஒக். 20

சாதாரண சிங்கள மக்கள் தான் முக்கிய முடிவுகளை எடுக்கின்றார்கள் என்று கூறுவது முற்றிலும் பொய்யானது. தமிழர்களின் உரிமைகளை வழங்க சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை என்பது தான் உண்மை.

இவ்வாறு லண்டனில் இருந்து வெளிவரும் "தமிழ் நேஷன்" பத்திரிகைக்கு அமைச்சர் தொண்டமான் பேட்டியளித்துள்ளார்.

அமைச்சரின் பேட்டி வருமாறு:

கேள்வி: தமிழர் பிரச்சினைக்கு புதிய ஜனாதிபதியால் தீர்வுகாண முடியும் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

தொண்டா: எல்லா சிங்கள அரசாங்கங்களும் ஒரே விதமானவைதான். ஜெயவர்த்தனா, பண்டாரநாயக்கா பிரேமதாசா மற்றும் ஏனையோருக்கு இடையே வித்தியாசமே இல்லை. பிரச்சினைக்குத் தீர்வு காணுவதில் அக்கறையாக இருப்பதாகத்தான் ஒவ்வொரு சிங்களத் தலைவரும் கூறுவார்கள்; ஆனால் அவர்கள் ஒருபோதும் பிரச்சினைக்குத் தீர்வு காண விரும்பமாட்டார்கள்.

வேறுபட்ட தமிழ் குழுக்களின் உண்மையான ஒற்றுமையில்தான் இதற்கான பரிகாரம் தங்கியுள்ளது.

உட்கட்சிச் சண்டையை தவிர்த்து, காட்டிக் கொடுப்பதை நிறுத்தி பரஸ்பரம் குற்றஞ்சாட்டுவதை தவிர்க்க வேண்டும். இந்தக் கட்டத்தில் தமிழர்கள் முன்னேறிச்செல்ல உள்ள ஒரே ஒரு வழி இதுவே.

கேள்வி: தமிழர் பிரச்சினை உள்நாட்டு விவகாரம் என நீங்களும் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது. அது அப்படியானால் பிரிட்டன், இஸ்ரேல் ஆகிய நாடுகள் இலங்கை அரசுக்கு ஆயுதங்கள், இராணுவப் பயிற்சிகள் மற்றும் உதவிகளை வழங்குவதை நீங்கள் எவ்விதம் நியாயப்படுத்துவீர்கள்?

தொண்டா: இக்கேள்விக்கு நான் பதிலளிக்க முடியாது; என்னிடம் அதற்கான பதில் இல்லை.

கேள்வி: தமிழர்களின் நியாயமான, நீதியான உரிமைகளை அங்கீகரிக்க சிங்கள அரசாங்கம் உறுதியாக மறுத்து வருவதுதான் பிரச்சினையின் முக்கிய கருவாக உள்ளது. இந்த நிலையில் தமிழர்களுக்கு மீட்பு உண்டா?

### காட்டிக் கொடுப்பதை நிறுத்த வேண்டும்

தொண்டா: இதற்கு உடனடியான பதில் என்னிடம் இல்லை. எனினும் நான் முன்னர் கூறியதையே திருப்பிக் கூறுகின்றேன். எல்லா தமிழர் உரிமைக் குழுக்களும் ஒன்றுபட வேண்டும் என்பதே அது.

தமிழர் உரிமைகளை தற்போது பாதுகாப்பவர்களின் கரங்களை இத்தமிழர் குழுக்கள் பலப்படுத்த வேண்டும். சுதந்திரப் போராளிகளைக் காட்டிக் கொடுப்பதை போட்டிக் குழுக்கள் நிறுத்த வேண்டும் என்பதே முதலாவதும் முக்கியமானதுமாகும்.

தமிழர்கள் ஐக்கியமாக செயற்பட்டால்தான் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது பற்றி சிங்களவர்கள் சிந்திப்பார்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி அரசியலைத் துறக்க வேண்டும். போராட முடியவில்லை என்றால், வேறு வழியில் போராட்டத்தை ஆதரிக்க வேண்டும்.

கேள்வி: சிங்கள அரசாங்கத்தில் தமிழ் அமைச்சராக நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுக்கு நிறைந்த அனுபவம் உண்டு. பேரம் பேசுவதில் வெற்றி கண்டுள்ளீர்கள்

தமிழ் ஈழம் என்ற சிந்தனையை சிங்கள மக்கள் எதிர்ப்பதால் தமிழர் கோரிக்கைகளை ஏற்க முடியாதிருப்பதாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களின் தலைவர்கள் கூறுகின்றனர்.

தொண்டா: இது பெரிய பொய். சாதாரண மக்கள் தான் முடிவுகளை எடுக்கின்றார்கள் என்று சொல்வது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும். தமிழர்களின் உரிமைகளை வழங்க சிங்களத் தலைவர்கள் விரும்பவில்லை என்பதுதான் உண்மை.

### சிங்கள தலைவர்களை நான் நம்பவில்லை

பல தசாப்தங்களாக மலையகத் தமிழரின் குடியுரிமைக்காக நான் போராடி வருகின்றேன். 40 வருடங்களுக்கு மேலாக எல்லா சிங்களத் தலைவர்களும் ஒன்றையே எனக்குத் தெரிவித்தனர். அவர்களை நான் ஒருபோதும் நம்பவில்லை.

ஒருநாள் அமைச்சரவைக் கூட்டத்தின் போது பிரேமதாசா என்னை ஒரு பக்கத்துக்கு அழைத்து சில மாதங்களில் பெரும்பான்மையான மலையகத் தமிழருக்கு குடியுரிமை வழங்குவதாக தெரிவித்தார். அப்படி அவர் கூறக் கூடியவிதமாக நான் நடந்து வந்துள்ளேன், பிரேமதாசா கூறியதை நான் பெரிதாக எடுக்கவில்லை. இருந்தும் அவர் தமது உறுதிமொழிப்படி நடந்து கொண்டார். அமைச்சரவை தான் முடிவு எடுக்கிறதே ஒழிய மக்கள் அல்ல என்பது இதில் இருந்து தெரியவருகிறது. இதுதான் உண்மை.

கேள்வி: இப்பிராந்தியத்தில் இந்தியா வல்லரசாக உள்ளது. இராணுவத் தலையீட்டின் மூலம் இலங்கையில் அமைதியைக் கொண்டுவர முன்னர் இந்தியா முயற்சித்தது. இலங்கையில் அமைதியை கொண்டுவர தலையிடும்படி இந்தியாவை நாம் வலியுறுத்துவது நல்லது இல்லையா?

### அரசு : புலிகள் பேசவேண்டும்

தொண்டா: இந்தியாவுக்கு பல உள் பிரச்சினைகள் உள்ளன. சொந்தப் பிரச்சினைகளையே தீர்க்க முடியாத நிலையில் இந்தியா உள்ளது. இலங்கையில் அமைதியை வெளியாரால் கொண்டுவர முடியாது. நான் முன்னர் சொன்னதுபோல் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேசவேண்டும்.

கேள்வி: வடக்கு - கிழக்கு இணைக்கப்பட்ட பிரதேசமாக உள்ளது. இவ்விரு மாகாணங்களையும் பிரிக்க வேண்டும் என்று நாடாளுமன்றத் தெரிவுக்குழு தீர்மானித்துள்ளது.

தொண்டா: 1977 அரசமைப்பின்கீழ், வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசமாக அங்கீகரிக்கப்பட்டது. ஐக்கியப்படுத்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணமே தமிழர் இலட்சியத்தைப் பலப்படுத்த முடியும். ஆகவே அந்த மாகாணத்தைப் பிரிப்பதற்கு தெரிவுக்குழு விரும்புவது ஆச்சரியத்தைத் தரவில்லை.

யுத்தத்தில் ஈடுபட்டுள்ள ஒரு தரப்பு மற்றத் தரப்பை பலவீனப்படுத்தவே எப்போதும் முயற்சிக்கும். இது ஒரு உபாயமாகும். இதனை நாம் விரும்பாமல் இருக்கலாம். (ஓ-ஏ)


கலாநிதி
காரை செ. சுந்தரம்பிள்ளையின்
## "காவேரி" நூல் வெளியீடு
இடம் : யாழ். இந்துக் கல்லூரி
குமாரசாமி மண்டபம்
காலம் : 21 — 10 — 93 வியாழக்கிழமை
மாலை 3 30 மணி
தலைவர் : திரு. து. வைத்திலிங்கம்
ஆசியுரை : நடமாடும் பல்கலைக் கழகம்
கரம்பனூர் ஆ. சபாரத்தினம்
வெளியீட்டுரை : திருமதி கோகிலா மகேந்திரன்
முதற்பிரதி பெறுநர் : திரு. க. சோமசேகரம்
(மகாராணி)
மதிப்புரை : திரு. க. சொக்கலிங்கம் M·A.
சிறப்புரை : பேராசிரியர் கா. சிவத்தம்பி
எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்
யாழ்/ இலக்கிய வட்டம்
**பிரதி 50/- விழாவில் 35/-**



விழா வெற்றிபெற வாழ்த்துபவர்கள்:
## விக்னா கல்வி நிறுவனம்
52, கிராஸ்வி வீதி, யாழ்ப்பாணம்.
(சி-6425)



யாழ் வர்த்தக ஊழியர் சங்கம்
## அங்கத்தவர்கள் கவனத்திற்கு
தமிழீழ சட்டக் கோவையில் தெரிவிக்கப்பட்டபடி வர்த்தக ஊழியர்களுக்கு மாதச் சம்பளம் 2500 ரூபா வழங்கப்பட வேண்டும் அதற்குரிய சேமலாபநிதியும் செலுத்த வேண்டும்: அத்துடன் வாரத்தில் 45 மணித்தியால வேலை நேரமாகும் அதற்கு கூட வேலை செய்தால் மேலதிக சம்பளம் வழங்கப்பட வேண்டும். இவைகள் இதுவரை வழங்கப்படாவிட்டால் எமது சங்க அங்கத்தவர்கள் நிர்வாக செயலாளருடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

வர்த்தக ஊழியர்கள் உங்கள் நலன் கருதி சங்கத்தில் உடன் அங்கத்தவராக சேர்ந்து கொள்ளுங்கள்.

டே. மரியதாஸ்
நிர்வாக செயலாளர்
வர்த்தக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
(சி/6255)



# BECON
யாழ்ப்பாணம்.
**94 A/L**
விலங்கியல்
புதிய Theory Classes
த கெங்காதரன்
ஆரம்பம்:
22 — 10 — 1993
வெள்ளி 3 p m.
**94 A/L**
புதிய பிரிவு
✶ BOTANY ✶
PAPER CLASS
ஆரம்பம்:
25 — 10 — 1993
(திங்கள்)
மாலை 3-00 — 4 30
செல்வநேசன்
(சி-6428)


யாழ்ப்பாணத்தில்

## வங்கியாளர் சங்கத்தின் நூலக நிலையம் திறப்பு

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் நூல் நிலையம் ஒன்று கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனா வைத்திய சாலைக்கு முன்பாக உள்ள யாழ்ப்பாணக் கல்லூரியின் பட்டப்படிப்புகள் பகுதியில் உள்ள இத் திருச்சபை கவுன்சிலின் இலங்கை வங்கிப் பிரதிநிதி திரு பவிக் நூலகத்தை திறந்து வைத்தார். யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் திரு. ஆ. இராஜநாயகம் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு மங்கள விளக்கேற்றி வைத்தார்.

இலங்கை வங்கி நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சைகளுக்கு வகுப்புக்களை நடத்துவதற்கும், வங்கி ஊழியர்களை வங்கிச் சேவையில் அபிவிருத்தி செய்வதற்கும், வங்கி ஊழியர்களுக்கு மட்டுமன்றி அனைத்து மாணவர்களும் வங்கி பற்றிய அறிவை விருத்தி செய்து கொள்ளவும் இந்நூலகம் மிகவும் பயனுள்ளதாக அமையும் என இந்நிகழ்வில் கலந்து கொண்ட இலங்கை வங்கியின் பிராந்திய முகாமையாளர் திரு.கே. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

கணக்காளர் சங்கப் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், வாடிக்கையாளர் சங்க பிரதிநிதிகளும் பெரும் எண்ணிக்கையிலான வங்கியாளர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஓ-162)

பதவி விலகாவிட்டால்

## ஆளுநருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

### முதலமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 20

தென் மாகாண ஆளுநர் பாக்கீர் மார்க்கர் இரண்டு வாரங்களினுள் பதவி விலகாவிட்டால் அவர் மீது மாகாண சபையில் நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டு வரப்படும் என்று எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடங்கொட இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

75 வயதான ஆளுநர் முதலமைச்சர் தெரிவில் ஜனநாயகம் மற்றும் அரசமைப்புக்கு முரணாக நடந்து கொண்டார் என்றும் —

ஒரு வேலையும் செய்யாத ஆளுநரை இவ்வளவு பெருந் தொகைப் பணம் சம்பளமாக வழங்கி வைத்திருக்க வேண்டியதில்லை என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

தென் மாகாண முதல்வராக ஐ.தே.கவைச் சேர்ந்த எம். எஸ். அமரசிறியை ஆளுநர் நியமித்ததும் —

அந்த நியமனம் சட்ட விரோதமானது என நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து, புதிய முதலமைச்சராக ஸ்ரீ. ல. சு. கவைச் சேர்ந்த அமரசிறி தொடங்கொட பதவியேற்றதும் தெரிந்ததே. (க-ஏ)


## தொடர்பு கொள்ளவும்
குரக்கனை கையிருப்பில் வைத்திருப்போர் அதனை விற்பனை செய்ய விரும்பின் உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
கொள்வனவு விலை: திட்டிய குரக்கன் 1 கிலோ 26/- மட்டும்
நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
1. தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாவட்ட, கோட்ட வட்ட தொடர்பாளர் அலுவலகங்கள்.
2. உதயம் பல்பொருள் அங்காடி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
3. மதுரம் பாண் தயாரிப்பகம், பலாலி வீதி, உரும்பராய்.
4. காமதேனு விவசாய கால்நடைப் பண்ணை, வெள்ளை வீதி, சுன்னாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். இந்து மகளிர் கல்லூரி வளர்ச்சிக்கு உழைத்த அதிபர் திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா அவர்களின்

## பிரிவுபசார சிறப்புமலர் (20 — 10 — 1993)

# கல்லூரி வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணித்து உழைத்த ஆற்றலும் ஆளுமையும் மிக்க அதிபர்

## வாழ்வு வளம் பெறுவதாக

அடக்கமும், பண்பும், அன்பும் கொண்டு அர்ப்பணிப்புடன் பணி செய்து இளைப்பாற இருக்கும் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திவ்யசிரோன்மணி நாகராசா அவர்களைப் பாராட்டுவதில் பெருமையடைகிறேன். நன் மக்கள் பேறுடைய இப் பெண்ணின் பெருந் தகை எவ்வெவர் திறமையும் மேற்கொள்ளாது நடுநிலையோடு ஆற்றிய தொண்டு மகத்தானதே. பத்மாவினி இராமநாதனின் பெரும் பணியைத் தொடர்ந்து சீருடனும், சிறப்புடனும் இந்து மகளிர் இணைய மெய் வருத்தம் பாராது, செவ்விருமையும் பாராது, அவமதிப்பும் கொளாது கருமமே கண்ணாய் ஆற்றிய பணிகள் பல.

திரு. இரா சுந்தரலிங்கம்.
கல்விப்பணிப்பாளர்,

## நன் மாணாக்கரை உருவாக்கியவர்

திருமதி திவ்ய சிரோன்மணி நாகராசா நன்மக்கட்பேறுடனும், அன்புள்ளப் பொலிவுடனும் புன்முறுவல் பூத்த பொலிவுறு முகத்தினராய் பெருந்தொண்டாற்றிய பெற்றியை நல்லோர் சிந்தைகள் என்றும் மறவா.

சி வேலாயுதம்
கோட்டக் கல்விப் பணிப்பாளர்.

## அதிபருக்குரிய சிறப்புடையவர்

ஆயிரக்கணக்கான மாணவர்களை திறம்பட நெறிப்படுத்திய பெருமை யாழ் இந்து மகளிர் கல்லூரியின் ஓய்வு பெறுகின்ற அதிபர் திருமதி தி நாகராசா அவர்களைச் சாரும். இப்பணியினைச் சிறப்பாகச் செயற்படுத்திய அதிபரின் ஓய்வுக்காலம் சிறப்பானதாக அமைய அவரை வாழ்த்தி அமைகிறேன்.

திரு. அ. பஞ்சலிங்கம்
யாழ். இந்துக்கல்லூரி அதிபர்

## அன்னையை வாழ்த்துதும்!

கட்டாய ஓய்வு சட்டமே இருவதால்
விடைமை விலகிச் சென்றபோதிலும்
எட்டுணையேனும் மறவோம் அன்னை
விட்டுச் சென்ற வழிதனை என்றும்

கண்ணியம் கடமை கட்டுப்பாட்டுடனே
கன்னை வடக்குக் கொத்தணி அதிபராய்
எண்ணற்ற இடரிடை அரும்பணி ஆற்றிய
அன்னை என்றும் வாழ்த்தப் படுமே

திருமதி யோ ஸ்ரீவிக்கினேஸ்வரா
அதிபர்
யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை,

## ஆசிரியர்களின் வாழ்த்து

எமது மத்தியில் கடந்த ஏழு வருடங்களாக அதிபராக பணியாற்றி கல்லூரியின் வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்து இன்று ஓய்வு பெறும் அதிபர் அவர்களை நீண்ட ஆயுள் பலத்துடன் சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் குழாம்
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## பள்ளியின் செவிலித்தாய்

சின்னமலர்த் தோட்டமென்ற எங்கள்
பள்ளியிலே...
ஆயிரம் மொட்டுக்களாக நாங்கள்
உருவாகினோம்
இன்னமொழிபேசும் நீங்கள்...
இந்த
காலத்தில் விடைபெறுகிறீர்கள்
கோடி இரத்தினங்கள் குவிந்து
வைத்திருக்கிறோம்!!
அன்பு அணிகலன்கள் செய்திருக்கின்றோம்...
எங்கள்
பள்ளியின் செவிலித்தாயே...
காலத்தின் ஓட்டத்தில் - எங்கள்
மனஇராகங்களின் "ரீங்கார ஒலி" நீங்கள்
தான்.

மாணவ முதல்வர்கள்,
யாழ். இந்து மகளிர் கல்லூரி.

## அயராது உழைத்தவர்

"தவமும் தவமுடையார்க்காகும்" என்பது முற்றிலும் உண்மை. யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அதிபராக அமரும்பேறு எல்லோர்க்கும் வாய்ப்பதொன்று அல்ல; இக்கல்லூரியின் அளப்பரிய கல்விச் சேவையையும் பண்பாட்டு வளர்ச்சியையும் பற்றிய பொன்விழா மலர் அனைத்தையும் வெளியிட்ட மலை போல் விளங்கி நிற்கிறது. இவற்றுக்கெல்லாம் அயராது உழைத்த அதிபர்கள் வரிசையில் திருமதி நாகராசா சிறப்பிடம் பெறுகிறார். காரணம் இவ்வம்மையார் காலத்திலேயே பொன்விழா ஆண்டு வந்து அமைந்ததை குறிப்பிடத்தக்கது. அம்மையாரின் ஓய்வு காலம் மேலும் மேலும் பயனுள்ளதாக அமையவும் சீர் சிறப்போடு பல்லாண்டு வாழ்ந்து பணி புரியவும் எல்லாம் வல்ல துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கிறேன்.

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா அவர்கள் தமது 35 வருட கல்விச் சேவையிலிருந்து இன்று ஓய்வு பெறுகிறார். இளைப்பாறும் அதிபருக்கு யாழ். இந்து மகளிர் சமூகம் உணர்வுபூர்வமான பிரியா விடையை நல்குகின்றது.

திருமதி தி. நாகராசா தமது ஆரம்பக் கல்வியை சிங்கப்பூரிலும், அதனைத் தொடர்ந்து பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியிலும் 1953 ஆம் ஆண்டு வரை கல்வி பயின்றார். 1953 — 1957ஆம் ஆண்டுவரை சென்னைப் பல்கலைக் கழகத்தில் இரசாயனவியலைச் சிறப்பும் பாடமாகப் பயின்று விஞ்ஞானப் பட்டதாரியாகி தாயகம் மீண்டார்.

தாயகம் திரும்பிய பின்னர் 01 - 11 - 1958ஆம் திகதி பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியுடன் இணைந்து ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். தாம் பெற்ற விஞ்ஞானக் கல்வியை மாணவர்களுக்கு ஊட்டிய திருமதி தி. நாகராசா, ஆற்றல் மிக்க ஆசிரியரானார். அவரது கற்பிக்கும் திறனினால் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் கல்லூரியும் வளர்ச்சி கண்டது.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் 19 ஆண்டுகள் சேவையாற்றியதைத் தொடர்ந்து, 30 05-1977ஆம் திகதியிலிருந்து யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்றார். அன்றிலிருந்து 6ஆம் வகுப்பிலிருந்து 10ஆம் வகுப்பு வரை விஞ்ஞானமும் க. பொ. த. உயர்தர வகுப்புகளுக்கு இரசாயனவியலும் கற்பித்து மாணவர்களினதும் அதிபர், ஆசிரியர்களினதும் நன்மதிப்பைப் பெற்றுக் கொண்டார். இவரது சேவையினைக் கருத்திற் கொண்டு 01-05-1986ஆம் திகதியிலிருந்து பகுதித் தலைவராகவும் பிரதி அதிபராகவும் நியமிக்கப்பட்டார். அப்போது அதிபராகவிருந்த செல்வி ப. இராமநாதன் இளைப்பாறியதைத் தொடர்ந்து 01-08-1986ஆம் திகதி கல்லூரியின் அதிபரானார். [illegible] திருமதி நாகராசா அவர்களின் ஆளுமை, ஆற்றல், பொறுமை, துணிச்சல் காரணமாகவும் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பின் காரணமாகவும் கல்லூரி கல்விசார், கல்விசாரா துறைகளில் பெருவளர்ச்சி கண்டது என்றால் மிகையாகாது. எந்த விடயத்திலும் தன்னை அர்ப்பணித்துத் தொண்டாற்றும் அவர் எந்தக் கஷ்டமான அலுவலையும் புன்சிரிப்போடு ஏற்றுச் செய்யும் சுபாவமுள்ளவர்.

கல்லூரி வளாகம் 1987இல் அகதி முகாம், அதனைத் தொடர்ந்து இந்திய இராணுவப்படை முகாம், 1990இல் குண்டு வீச்சு 1991, 1993இல் இடம் பெயர்ந்தார் அகதி முகாமாக காலத்துக்குக் காலம் மாறியபோது கல்லூரியின் உடைமைகளைப் பாதுகாத்து தொடர்ச்சியாக கல்லூரி இயங்க அயராது பாடுபட்டவர் அவர். ஸ்ரீலங்கா அரச தமிழ் மாணவர்களின் கல்வியில் பாராமுகம் காட்டி வரும் இக்காலகட்டத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளை விஸ்தரித்து மாணவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தார்.

24-05-1989ஆம் திகதியிலிருந்து பத்துப் பாடசாலைகளைக் கொண்ட கொத்தணி அதிபராகக் கடமையாற்றி அப்பாடசாலைகளின் நன்மதிப்பைப் பெற்றவர்

யாழ் இந்து மகளிர் கல்லூரியின் பொன் விழாவைக் கொண்டாட வேண்டும் என்பதில் அதிபர் அவர்கள் பெரும் ஆர்வம் காட்டினார். சிறப்பாகக் கொண்டாடி கல்லூரி அன்னையின் பெருமையைப் போற்ற வேண்டும் என்பதில் அவர் காட்டிய அக்கறைக்கு அளவில்லை. 04-02-1993ஆம் திகதி அமைக்கப்பட்ட பொன்விழாச் சபையின் தலைவராகவிருந்து 29-05-1993ஆம் திகதி பொன்விழாவின் கால்கோள் விழாவினையும், அதனைத் தொடர்ந்து கல்விக் கண்காட்சி கலை விழாக்கள் பொன்விழா மலர் வெளியீடு என்பவற்றைச் செயலாக்கி கல்லூரி அன்னைக்குப் புகழ் சேர்த்தார்.

([illegible] பார்க்க)

— நா. செல்வரத்தினம் —
செயலாளர்,
பொன்விழாச் சபை



## தலைசிறந்த நிர்வாகி

நாட்டில், இந்து மகளிருக்கான கல்லூரிகளில் உயர்ந்த நிலையை வகிப்பது யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரி. செல்வி ப. இராமநாதன் தலைசிறந்த நிர்வாகத்தில் பெறப்பட்ட உயர்ச்சி சற்றும் தளராமல் இன்றும் விளங்குவது என்றால் அது அவரைத் தொடர்ந்து அதிபர் பதவி வகித்து இன்று இளைப்பாறும் திருமதி தி. திவ்யசிரோன்மணி நாகராசா அவர்களையே சாரும்.

பேராசிரியர் செ. பாலச்சந்திரன்,
தலைவர் புவியியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

## நலம் காக்கும் அதிபர்

யாழ். இந்துமகளிர் கல்லூரி யாழ். யாழ் இந்துப் பெண்களின் அறிவுசிலமாக — ஒழுக்கசீலமாக — தியாகசீலமாக விளங்கும் பெருமை உடையது சாலஞ்சென்ற அதிபர் செல்வி ப. இராமநாதன் அவர்களின் கட்டுக்கோப்பான, கண்ணியமான, கடமை மேம்பாடு உடைய நிர்வாகத்தை, தொடர்ந்து கட்டிக் காத்து, காப்பதற்கு உறுதுணையாயிருந்த பெருமை, இக்கல்லூரியின் பொன்விழா ஆண்டில் (1993 இல் பல்துறையிலும் பல நிகழ்ச்சிகளையும் செய்து பழைய மாணவர்களையும் பல்துறை வல்லுனர்களையும் கௌரவித்து இன்று இளைப்பாறும் அதிபரான திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா அவர்களுக்கே உரியது.

திருமதி ப திலகநாயகம் போல்
மேலதிக அரசாங்க அதிபர்.

## பொன்விழா எடுத்தவர்

திருமதி நாகராசாவின் சேவையினால், இக்கல்லூரி அபரிமிதமான வளர்ச்சி கண்டிருக்கின்றது இவருடைய சேவைக் காலத்திலேயே இக்கல்லூரியினுடைய பொன்விழா அமைகின்ற சிறப்பையும் பெற்றது. யாழ். இந்துமகளிர் கல்லூரியின் வரலாற்றிலே இவருடைய சேவைக்காலம் 'பசுமையான முத்திரையாக காலம் எல்லாம் நிலைத்திருக்கும்'

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## கல்லூரியை வளர்த்தவர்

கல்வி வளர்ச்சி அதிபர், ஆசிரியர்கள் மட்டுமல்லாது பெற்றோர், நலன் விரும்பிகளின் ஒத்துழைப்பினாலும் சாதிக்கலாம் என்பதை உதாரணமில்லாமல் செயலுருவில் காட்டியவர். இவரின் சேவைக்காலத்தில் கல்லூரி கல்விசார், கல்விசாரா துறைகளில் பாரிய முன்னேற்றத்தைக் கல்லூரி கண்டுள்ளது. அரசின் தமிழர்களுக்கு எதிரான கல்விக் கொள்கைகளின் விளைவாக தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டு வருகின்ற இக்காலப் பகுதியில் தனது திறமையினை முழுமையாகப் பயன்படுத்தி யாழ் மாவட்டத்தில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக வளர்த்தெடுத்த அதிபர்கள் வரிசையில் திருமதி தி. நாகராசா அவர்களின் பங்கு முக்கியமானது. அவர் பல்லாண்டு வாழ்ந்து கல்விப் பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

-கலாநிதி கா. குகபாலன்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்/ சபை

## பல பணிகளைச் செய்தவர்

திருமதி திவ்யசிரோன்மணி நாகராசா பழைய மாணவர் சங்கத் தலைவியாகவும் இருந்து பணிகள் பல ஆற்றியவர். அவருக்கு எம் பாராட்டுதல்களைச் சமர்ப்பிப்பதோடு, ஆயுள் விருத்தி, உடல்நலம், மனமகிழ்ச்சி, ஆத்ம திருப்தி முதலிய பல பேறுகளையும், இறையருளையும் வேண்டி வாழ்த்துகிறோம்.

புஷ்பா செல்வநாயகம்
தலைவி
பழைய மாணவர் சங்கம்.

## பெருமைமிக்க அதிபர்

யாழ்ப்பாணத்து மாநகரசபை எல்லைக்குள் நல்லதொரு தமிழ்ச் சூழலில் அமைந்துள்ள இந்து மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகவும், உதவி அதிபராகவும், அதிபராகவும் கடமையாற்றி ஆயிரக்கணக்கான பெண்பிள்ளைகளைப் பெருமையடிகள் என எதிர்காலத்துச் சந்ததியினர் பெருமனதில் பாராட்டிப் போற்றும் வண்ணம் உருவாக்கிவிட்ட பெருமைமிக்க அதிபர்களுள் திருவாட்டி தி.நாகராசா அவர்களும் ஒருவர்.

பொன் விழாப் பூசிப்பில் ஓய்வு பெறும் அம்மையார் இன்னும் எதிர்வரப்போகும் வைர விழா, பவளவிழா, முத்துவிழா, நூற்றாண்டு விழா என்பனவற்றையும் பூவோடும், புன்முறுவலோடும் வாழ்ந்து கண்டு இன்புறுமாறு இறையருள் கிடைக்கப் பிரார்த்தித்துப் பாராட்டி வாழ்த்தி அமைகின்றோம்.

க.கனகராசா. J.P.

(விளம்பர இல: 8/6252)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### வியாழன், சனி மாற்றங்கள்

ஐப்பசி மாத, வியாழன், சனி, செவ்வாய் மாற்றங்களும், கார்த்திகை 10இல் நிகழும் (கும்பத்திற்கு) சனிமாற்றமும். என்ஜோதிடரும் அடங்கியது. சகல ராசிகளின் பலன்கள் ரூபா 10/- எங்கும் கிடைக்கும். திர்க்கா கிரேசனர்ஸ், சுன்னாகம். நூலாசிரியர் Prof; சந்திரஹாஸன். (6696)

### காணவில்லை

T 2200974 இலக்கமுடைய லேடிஸ் ஜமானா சைக்கிள் ஆஸ்பத்திரி வீதியில் 14-10-93 அன்று காணாமல் போயுள்ளது. இதன் விபரம் தருபவர்களுக்கு தகுந்த சன்மானம் தரப்படும். தொடர்பு: இ. குபேரகாந்தன், 39, பருத்தித்துறை வீதி, வீரமாகாளி அம்மன் கோவிலடி. (27659)

### தேவை

இம்மாதம் சுன்னாகத்தில் ஆரம்பிக்கப்படும் ஒளிரபான சாலைக்கு விண்ணப்பித்திருந்த, விண்ணப்பிக்காத (ஆண்கள் மட்டும்) கணக்காளர், பில் எழுதுனர், பரிமாறுவோர், சமையல் அனுபவசாலிகள் பதவிகளுக்கு 24-10-93 ஞாயிறு காலை 8-00—9-00 வரை நேரில் சமுகம் தரவும். நியூ சித்திரகலா ஸ்ருடியோ, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (27708)

### திருத்தவேலைகளுக்கு

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்கள் அனைத்தும் நிபுணர்களால் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். டிஸ்கோ றேடியோ அன்ட் வோச் வேக்ஸ், 284, கிராமிய வீதி, (வாசலில் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-6170]

# COMPUTER கல்வி

Diploma in Computer Programming

BASIC Language

4 Months

சனி, ஞாயிறு வகுப்புகள்

ஆரம்பம்: **23 - 10 - 1993**

8-30 மணி

Fees: மாதம் ரூ 400/- மட்டுமே

உறுதியான கல்வியைப் பெற

SCHOOL OF BUSINESS ADMINISTRATION

(Pioneers of Computer Education)

16, 3rd Cross Street, Jaffna.

(C 6251)

## சாவகச்சேரி நகரசபை

# ஆதனவரி அறிவித்தல்

1993 ஆம் ஆண்டு 4 ஆம் காலாண்டிற்குரிய ஆதன வரியை 29 - 10 - 1993 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ செலுத்துவோருக்கு காலாண்டிற்குரிய தொகையில் 5% வரிக்கழிவு வழங்கப்படும் என்பதை வரியிறுப்பாளர்களுக்கு அறியத் தருகின்றேன்.

எனவே 29 - 10 - 1993 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பகல் 12.00 மணிக்கு முன்பாக வரிகளை நிலுவையின்றிச் செலுத்தி இச்சபையுடன் ஒத்துழைக்குமாறு சகலரையும் கேட்டுக் கொள்கிறேன்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி
18 - 10 - 1993

(சி-6249)

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்: 04 — 10 — 1927

தருமத்தின் பிடியில்: 04 — 11 — 1989

## சின்னக்குட்டி வைத்திலிங்கம்

(ஓய்வு பெற்ற அரசினர் வைத்தியசாலை உத்தியோகத்தர்)

திதி: 20 — 10 — 1993

ஆண்டிரு நான்கு திங்கள் பறந்திட்ட போதிலும்
ஐயா பாசமிகு உங்கள் நினைவு பதிந்திட்ட
எங்கள் நெஞ்சம் ஐயா பரிதவிக்குதே
அன்றும் இன்றும் என்றும் ஐயா!

அன்பு மிகு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுகிர்தகலா பவனம்,
இளமாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

(6541)

## சாவகச்சேரி - நகரசபை

# 1994ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

01-01-1994 தொடக்கம் 31-12-1994 வரையிலான காலப்பகுதியில் கீழ்க் குறிப்பிடப்படும் வியாபாரம்/சேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 03-11-1993 ஆம் திகதி முற்பகல் 10-00மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| விபரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| **வியாபாரம்** | | | | |
| 1. சாவகச்சேரி நகரசபை பொதுச்சந்தை (சபையால் மாதாந்தம் அறவிடப்படும் கடை வாடகைகள் நீங்கலாக) | | 266750-00 | 1500-00 | 500-00 |
| 2. சாவகச்சேரி நகரசபை மீன்சந்தை (சபையால் மாதாந்தம் அறவிடப்படும் கடை வாடகைகள் நீங்கலாக) | | 67100-00 | 1500-00 | 500-00 |
| 3. ஆட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 1 | 50600-00 | 1000-00 | 500 00 |
| 4. ஆட்டிறைச்சிக் கடை | என். எம். எஸ். 2 | 60000-00 | 1000-00 | 500-00 |
| 5. மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 3 | 54550-00 | 1000-00 | 500-00 |
| 6. மாட்டிறைச்சிக்கடை | என். எம். எஸ். 4 | 85000 00 | 1000-00 | 500.00 |
| 7. வாகனம் நிறுத்துமிடங்களில் குத்தகை அறவிடுதல் | | 18420-00 | 1000-00 | 500-00 |
| **சேவைகள்** | | | | |
| 8. குப்பை கழிவுகளை அகற்றி இரட்டை மாட்டு வண்டியில்/உழவு இயந்திரம் பெட்டி உட்பட வாடகைக்கு விடுதல் | | — | 1000-00 | 500-00 |

மேற்படி வைப்புப் பணம் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்தப்படுவதன் பேரில் 02-11-1993ஆம் திகதி 12-30 மணி வரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும். மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இது சம்பந்தமான ஏனைய விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

த. நவரத்தினராசா,
செயலாளர்,
நகரசபை சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி. 15-10-1993

(சி-6248)

## சாவகச்சேரி பிரதேசசபை

# 1994ஆம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி பிரதேசசபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 1994ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான காலப்பகுதி குத்தகைக்குக் கொடுப்பதற்கான கேள்விகள் 03-11-1993 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்களை சாவகச்சேரி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் 01-11-1993ஆம் திகதி பிற்பகல் 12-30 மணி வரை கீழ்க்குறிப்பிடப்படும் அட்டவணையின் பிரகாரமான மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணத்தையும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை "விசேட ஆணையாளர், சாவகச்சேரி பிரதேசசபை கொடிகாமம்" என்ற முகவரிக்கும் இணைப்பிரதியை "உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் இன்னதுக்கான கேள்வி என எழுதி அரக்கு முத்திரையிட்டு பதிவுத்தபால் மூலம் 03-11-1993ஆம் திகதி நண்பகல் 12-00 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அல்லது சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையிலுள்ள கேள்விப்பெட்டியில் இடுவதன் மூலம் கிடைக்கச் செய்யவும். கேள்விப்பத்திரங்கள் 03 11-1993ஆம் திகதி பிற்பகல் 2-00மணிக்கு சாவகச்சேரி பிரதேசசபைப் பணிமனையில் வைத்துத் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகம் கொடுக்கலாம்.

கேள்விப்பத்திரங்களைப் பெறுபவர்கள் தம்முடன் அடையாள அட்டையையும் கொண்டுவருதல் வேண்டும். கேள்விப்பத்திரங்களைப் பெறத்தகுதியற்றவர் எனக் கருதப்படும் ஒருவருக்கு விசேட ஆணையாளரால் கேள்விப் பத்திரங்கள் வழங்காது விடப்படலாம். 1993ஆம் ஆண்டு அதற்கு முன்னர் குத்தகைப்பணத்தைச் செலுத்தாதவர்களுக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் மாத்திரம் குத்தகையை ஏற்று நடாத்த அனுமதிக்கப்படுவர்: ஆள்மாறாட்டம் எதுவும் செய்யப்படுமிடத்து குத்தகையை இரத்துச் செய்யும் அதிகாரம் விசேட ஆணையாளருக்குண்டு. இது சம்பந்தமான மேலதிக விபரங்களையும், நிபந்தனைகளையும் பிரதேசசபை தலைமைப் பணிமனையில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். நிபந்தனைகளை மீறுமிடத்து கேள்விகளைப் பிற்போடவோ, இரத்துச் செய்யவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு. கொள்வனவுப் பணம் அப்போதைய காலப்பகுதிக்கு அமைவாக செலுத்தப்படுதல் வேண்டும்.

## 1994 கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விபரம் | ஏற்றுக்கொள்ளப் படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்விப் பிணைப் பணம் | கேள்விப் பத்திரப் பணம் |
|---|---|---|---|
| **கச்சாய் உப பணிமனை** | | | |
| 1. கொடிகாமம் பொதுச்சந்தை | 1,82,000 | 500 | 200 |
| 2. கொடிகாமம் சந். மா. இறைச்சிக் கடை | 40,000 | 100 | 100 |
| 3. கொடிகாமம் சந். ஆட். இறைச்சிக் கடை | 3,000 | 100 | 100 |
| 4. கொடிகாமம் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 8,500 | 100 | 100 |
| **மிருசுவில் உப பணிமனை** | | | |
| 1. மிருசுவில் பொதுச்சந்தை | 550 | 100 | 100 |
| 2. மிருசுவில் மாட். இறைச்சிக்கடை | 9,000 | 100 | 100 |
| 3. எழுதுமட்டுவாள் பொதுச்சந்தை | 200 | 50 | 50 |
| 4. மிருசுவில் வடக்கு சந்தை | 150 | 50 | 50 |
| **வரணி உப பணிமனை** | | | |
| 1. வரணி பொதுச்சந்தை | 18,100 | 100 | 100 |
| 2. வரணி சந்தை மா. இறைச்சிக்கடை | 11,000 | 100 | 100 |
| **கைதடி உப பணிமனை** | | | |
| 1. கைதடி பொதுச்சந்தை | 1 650 | 100 | 100 |
| 2. கைதடி ஆட்டிறைச்சிக்கடை | 10,000 | 100 | 100 |
| 3. கைதடி மா. இறைச்சிக்கடை | 11,500 | 100 | 100 |

பு. சுந்தரம்பிள்ளை,
விசேட ஆணையாளர்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம். 18 . 10 . 1993.

(சி-6250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பழக்கம் மாறாது

தென் மாகாணத்திலும், வட மேல் மாகாணத்திலும் தான் இழந்த போன அதிகாரத்தை மீண்டும் பெறுவதற்கு ஆளுங்கட்சி — ஐக்கிய தேசியக் கட்சி — பெரும் முயற்சி செய்து வருகிறது.

மாகாண சபைகள் என்ற அமைப்பு இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் உருவாக்கப்பட்டது. தமிழர்களுடைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கெனவே அவை அமைக்கப்பட்டன. சிங்களப் பொதுமக்கள் கேளாமலே அவர்களுக்குக் கொடுக்கப்பட்டவை. வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்துக்கென ஒரு மாகாண சபையை மட்டும் நிறுவினால் அது தமிழர்களுக்கு வழங்கப்பட்ட விசேட சலுகையாகிவிடும் எனக் கருதி சிங்களப் பகுதிகளிலும் அவை நிறுவப்பட்டன.

இந்த வருடம் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் ஆளுங்கட்சியினால் முன்னரைப் போல எல்லாச் சபைகளிலும் வெல்ல முடியவில்லை. முக்கியமான, கேந்திரமான மூன்று மாகாணங்களில் அது அமோக வெற்றியீட்ட முடியவில்லை, எதிர்க்கட்சிக் கூட்டணிகளே அரசமைக்கக் கூடிய விதத்தில் தேர்தல் முடிவுகள் அமைந்தன.

தேர்தல் முடிந்தவுடன் தெற்கிலும், வடமேல் மாகாணத்திலும் இரண்டு எதிரணிகள் கூட்டுச் சேர்ந்து இயங்கப் போவதாக அறிவித்திருந்தன எனினும் ஆளுநர்கள் ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்களாக இருந்த காரணத்தால் தேர்தல் முடிவுகளை தமது கட்சிக்கு ஆதரவாகக் கணக்கெடுத்து ஆட்சி அதிகாரத்தை ஐ தே கட்சிக்கே வழங்கினார்கள். ஆனால் நீதிமன்றம் ஆளுநர்களின் முடிவும், செயலும் தவறு என்று தீர்ப்பளித்தது. அதனைத் தொடர்ந்து இரண்டு மாகாண சபைகளிலும் இப்போது எதிரணியே ஆட்சிக்கு வந்துள்ளன.

தென்னிலங்கையின் மாகாண சபைத் தேர்தலை சிங்களக் கட்சிகள் பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் என்பனவற்றுக்கு முந்திய முன்னோடித் தேர்தலாகவும், மக்கள் ஆதரவை நாடி பிடித்துப் பார்க்கும் அளவு கோலாகவும் கருதினர். அந்தப் பின்னணியில் பார்க்கும்போது, மொத்தமுள்ள 90 லட்சம் வாக்காளர்களில் 56 லட்சம் வாக்காளர்களைக் கொண்ட மேற்கு, தெற்கு, வடமேல் மாகாணங்கள் எதிரணிகள் வசம் வீழ்ந்துள்ளன.

இது அரசாங்கத்தின் பலவீனத்தை வெளிப்படுத்துகிறது. பொதுத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளும் இதே மாதிரி தமக்குப் பாதகமாக வந்துவிடுமோ என்று ஆளுங்கட்சியினர் அஞ்சுகின்றனர். அப்படி ஒரு நிலைமை ஏற்படாமல் தடுக்கும் முயற்சியே தெற்கிலும் வடமேற்கிலும் மீண்டும் தம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான பகீரதப் பிரயத்தனம். சம்பந்தப்பட்ட மாகாண சபைகளின் உறுப்பினர்களைத் தமது பக்கம் கவர்ந்திழுக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள். விலை கொடுத்து வாங்கும் முயற்சிகள்.

சிங்கள நாட்டில் தானே தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்பதற்காக நீதிமன்றத் தீர்ப்பை தோற்கடித்து விட ஐக்கிய தேசியக் கட்சி தலைகீழாக நிற்கிறது.

அது மட்டுமல்ல, தமிழர் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணுவது என்ற ஜனாதிபதியின் முடிவுக்கும் மாகாண சபைத் தேர்தல் முடிவுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இராணுவத் தீர்வு மூலம் தமிழர்களைத் தோற்கடித்து விட்டதாகக் காட்டினால் தெற்கில் சரிந்து போனவாக்கு வங்கியை நிரப்பலாம் என்று விஜேதுங்கா நினைக்கிறார்.

அவர் இராணுவத்தினருக்கு வடக்கு - கிழக்கைப் பிடிப்பதற்கு அவகாசம் வழங்கியிருப்பதும் தேர்தலுக்கு வாக்குத் தேவை கருதியே.

தமிழர் விவகாரத்தை தமக்கு அரசியல் லாபமாக்கி ஆட்சிபீடம் ஏறும் பழக்கத்தை அவர்கள் இன்னமும் மாற்றவில்லை. இதனை இல்லாதொழிப்பதற்குத் தமிழர்கள் தமக்கென ஓர் அரசை நிறுவுவதே ஒரே வழி.

---

#### ஆலயங்களில்

நல்லூர் ராகவேந்திரா சுவாமிகள் ஆலயத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணி முதல் வாணி விழா நடைபெறும். இசையிலும் மாணவர்கள் எமிடுக் குழுக்களாக இசை ஆராதனைகளை நடத்துவர். (த-162

#### கலந்துரையாடல்

1993 ஏப்ரல் விசேட பரீட்சையில் தோற்றி வெட்டுப் புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான ஒன்றியத்தின் கலந்துரையாடல் ஒன்று இன்று புதன் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். (த)

#### "வெளிச்சம்" இன்று வரும்

யாழ்ப்பாணம், ஒக். 20

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான "வெளிச்சம்" கலை, இலக்கிய, சமூக சஞ்சிகையின் ஐப்பசி மாத இதழ் இன்று வெளிவருகின்றது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவர் திரு வே. பிரபாகரன் உலக ஆசிரியர் தினத்தையொட்டி வழங்கிய செய்தியுடன் மற்றும் கவிதை, கட்டுரை ஆகிய பக்கங்களும் சிறுகதைகளும் இடம்பெற்றுள்ளன. (த)

#### இன்று

நல்லூர் பிரதேசத்தைச் சேர்ந்த சகல துறை வர்த்தகர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று புதன் பிற்பகல் 3 மணிக்கு கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் நடைபெறும். இதில் விடுதலைப் புலிகளின் பிரமுகர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவர். (த)

o o o

யாழ். விவேகானந்த மதிப்பீட்டு இணைக்கள இந்த மாமன்ற வாணிவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு நிலையக் கலை மண்டபத்தில் நடைபெறும். பட்டி மண்டபம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் என்பன நடைபெறும். (த-89)

o o o

சரசாலை இந்து மன்றம் நடாத்தும் காலாண்டுக் கருத்தரங்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தில் இன்று பி. ப. 2 30 மணிக்கு ஆரம்பமாகும்.

கோத்தணி அதிபர் திரு க. கந்தையா தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புரை நிகழ்த்துவார். (அ)

#### நாளை

திருக்கேதீச்வரம் மற்றும் பூசை வழிபாடுகள் தடைப்பட்டுள்ள ஆலயங்களை திறக்க வேண்டியும் அமைதி நிலவ வேண்டியும் நடைபெறவுள்ள பிரார்த்தனை குறித்து ஏற்பாடுகளை ஆராய்வதற்கான கூட்டம் நல்லை ஆதீனத்தில் நடைபெற உள்ளது.

யாழ். இந்து இளைஞர் பேரவை ஆதரவில் நாளை பி.ப. 4 மணிக்கு நடைபெறும் இக் கூட்டத்தில் இந்து இளைஞர் சங்கங்களின் பிரதிநிதிகள், ஆலய தர்மகர்த்தாக்கள் ஆகியோர் கலந்து கொள்வர். (அ-80)

---

கல்லூரி....

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவரது காலத்திலேயே மாணவர்களின் திறமை, உற்சாகத்தை வெளிக்கொணரும் நோக்குடன் முதன் முதலாக பரிசளிப்பு விழா நடத்தப்பட்டது.

இன்று ஓய்வு பெறும் அதிபர் அவர்களின் சேவைகளுக்காக இந்த மகளிர் சமூகம் என்றுமே நன்றியுள்ளதாக விளங்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்த மகளிர் கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆசிரியராகவும், அதிபராகவும் மொத்தம் பதினாறு வருடங்கள் பெரும்பணியாற்றிய பெருமை அவருக்குண்டு. இந்த மகளிர் கல்லூரிக்குத் தொண்டாற்றக் கிடைத்த வாய்ப்பாகப் பெரும் பேறாகக் கருதி மகிழ்ச்சியுறும் அவரால் கல்லூரி அன்னையும் பெருமையுற்ற மகிழ்ச்சி அடைகிறாள்.

அவர் தமது ஓய்வு காலத்தில் நலத்துடன் வாழ்ந்து தொடர்ந்தும் கல்விப் பணியாற்ற கல்லூரி நடுத்தோம் [illegible] எழுந்தருளியிருக்கும் இராசவரோதயப் பிள்ளையார் [illegible] பிரார்த்திக்கின்றோம்.

---

# ஐ.தே. கவில் சேருமாறு அனுராவுக்கு அழைப்பு

### கட்சிச் செயலாளர் விடுத்தார்

கொழும்பு, ஒக். 20

ஐக்கிய தேசியக் கட்சியில் சேர்ந்து பணியாற்ற முன்வருமாறு அக்கட்சியின் பொதுச் செயலாளரும் சிரேஷ்ட அமைச்சருமான சிறிசேன கூரே, சுதந்திரக் கட்சியில் இருந்து ராஜினாமாச் செய்த அனுரா பண்டாரநாயக்காவுக்கு பகிரங்க அழைப்பு விடுத்திருக்கிறார்.

"இது ஒரு பகிரங்க அழைப்பாகும். எமது தலைவரான ஜனாதிபதியும் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் அனுரா எம்முடன் சேர்வதை நிச்சயம் வரவேற்பார்கள்" — என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியைக் கட்டி எழுப்பியவர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா. ஆகவே அவரின் மகனான அனுரா எம்முடன் சேர்வதற்கு எந்தத் தடையும் இருக்காது என்றும் அவர் கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவும் அனுராவுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்துக் கூறினார்.

பதவி விலகல் முடிவு கவனமான பரிசீலனையின் பின்னர் எடுக்கப்பட்டதா என்று திரு. ஜெயவர்த்தனா அனுராவைக் கேட்டார். (உ-எ)

# அழைப்பை அனுரா பரிசீலிக்கின்றார்

கொழும்பு, ஒக். 20

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியில் சேரும்படி அக்கட்சியின் பொதுச் செயலாளர் விடுத்த அழைப்பைத்தாம் தீவிரமாகப் பரிசீலனை செய்வதாக அனுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

"புதிய அரசியல் கட்சி எதனையும் ஆரம்பிக்கும் நோக்கம் எனக்கு இல்லை" என்றும் அவர் கூறினார்.

### அனுராவுக்கு ஆதரவாக

# சு. கவின் 17 எம். பிக்கள் ராஜினாமா செய்யத் தயார்!

கொழும்பு, ஒக். 20

அனுரா சுதந்திரக் கட்சியில் இருந்து பதவி விலகுவதற்கு ஆதரவு தெரிவிக்குமுகமாக அக்கட்சியிலிருந்து விலக 17 எம். பிக்கள் முன்வந்தனர் என்றும் —

அதனை அனுரா தடுத்து நிறுத்தி விட்டதாகவும் "சண்டே ஐலண்ட்" அனுராவை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டிருக்கிறது.

# பாக். பிரதமராக மீண்டும் பெனாஸிர்

பாகிஸ்தானின் பிரதமராக இரண்டாவது தடவையாக பெனாஸிர் பூட்டோ தெரிவு செய்யப்பட்டார்.

நேற்று புதிய நாடாளுமன்றில் நடைபெற்ற பிரதமர் தெரிவுக்கான தேர்தலில் தம்மை எதிர்த்துப் போட்டியிட்ட பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ் பிரிவு) தலைவரும், முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீபை 121 இற்கு 72 என்ற வாக்குகள் வித்தியாசத்தில் பெனாஸிர் பூட்டோ தோற்கடித்தார். நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 217 ஆகும். (உ-எ-க)

# 'வாதுவ' வந்து சேர்ந்தது 'கோமாரி' இன்று புறப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 20

நேற்று மாலை பருத்தித்துறைக்கு வந்துசேர்ந்த 'வாதுவ' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் இன்று ஆரம்பமாகும்.

இதேவேளை —

காங்கேசன்துறையில் பொருள்கள் இறக்கி முடித்த 'கோமாரி' கப்பல் இன்று நண்பகல் பருத்தித்துறைக்கு வந்து திருகோணமலைக்கு செல்லும் பயணிகளை ஏற்றிக்கொண்டு செல்லும் என்றும் —

இக்கப்பலில் செல்ல பெயர் பதிவு செய்தவர்களை இன்று நண்பகல் 12 மணிக்கு முன்பாக பருத்தித்துறை துறைமுகப் பகுதிக்கு வரும்படியும் — யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் கேட்டுள்ளார். (உ-8-5-87-109)

# ஆஸ்பத்திரி உபகரணங்கள் வாதுவவில் வரவில்லை

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ். ஆஸ்பத்திரிக்கு பிரிட்டிஷ் அரசு வழங்கிய உபகரணங்களில் ஒரு தொகுதியை 'வாதுவ' கப்பல் மூலம் எடுத்து வர எடுக்கப்பட்ட முயற்சி, இறுதியில் கைகூடாமல் போயிற்று.

வெலிசறையில் வைக்கப்பட்டிருந்த இந்த உபகரணங்கள் அடங்கிய கொள்கலன் ஒன்று சுங்கப் பகுதியினரின் சோதனையின் பின்னர் 'வாதுவ' கப்பலில் ஏற்றுவதற்காக கொழும்பு துறைமுகத்துக்கு ஏடுத்து வரப்படவில்லை ஆகவும் —

அந்தக் கொள்கலனை 'வாதுவ' கப்பலில் ஏற்றுவதற்கு தேவையான பாரம் தூக்கியை ("கிறேனை") பெறுவதில் ஏற்பட்ட தடைகள் காரணமாக இறுதியில் அந்தக் கொள்கலனை கப்பலில் ஏற்ற முடியாது போனதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் கொழும்பு துறைமுகத்தில் வைக்கப்பட்டுள்ள அக்கொள்கலனை அடுத்து வரும் கப்பல் ஒன்றில் ஏற்றி இங்கு அனுப்ப முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-8)

### இனப்பிரச்சினைக்கு தீர்வு:

# சர்வதேச முயற்சிகளை இலங்கை அரசு ஏற்காது

### வாஷிங்டனில் ரணில் அறிவிப்பு

வாஷிங்டன், ஒக். 20

பத்தாண்டுகளாக நிலவிவரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவும் எந்த சர்வதேச முயற்சிகளையும் இலங்கை அரசு ஏற்காது.

ஒருவார கால அமெரிக்க பயண முடிவில் வாஷிங்டனில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்கண்டவாறு தெரிவித்தார்.

[illegible]

கட்டமைப்பு நீக்குப்போக்குடையதாக அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளை பொறுத்தமட்டில் எனது அரசு ஒளிவுமறைவற்ற பகிரங்க கொள்கை ஒன்றையே பின்பற்றி வருகின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

என்னைப் பயிரிடுவோம்
எண்ணை வளம் பெருக்கிடுவோம்

---

#### இன்று விவாதம்

13 ஆம் திகதி கல்றுகாவியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இருவர் உயிரிழந்தது குறித்து — இன்று நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெறவிருக்கிறது.

---

இலங்கை....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல் வெளியிட்டிருக்கிறது.

ஒக்டோபர் 8 ஆம் திகதி கச்சதீவுக்கு அருகில் வைத்து மூன்று இந்திய மீன்பிடிப் படகுகள் மீது இலங்கைக் கடற்படையினர் சுட்டதில் நான்கு இந்திய மீனவர்கள் உயிரிழந்தனர் என்று கொழும்பில் உள்ள இந்திய ராஜதந்திரி குற்றம் சாட்டினார்.

இத்தாக்குதல்களுக்கு இலங்கைக் கடற்படையினர் பொறுப்பல்ல என்று விசாரணையில் தெரியவந்திருப்பதாக இரேஷ் கடற்படைப் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

எனினும் இலங்கை கடற்படைதான் அத்தாக்குதலை நடத்தியதாக இந்திய அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

#### புலிகள் மீது குற்றச்சாட்டு

இத்தாக்குதலின் பின்னால் விடுதலைப்புலிகள் இருந்திருக்கலாம் என்று கடற்படை அதிகாரிகள் நம்புகின்றனர்.

அதிவேக படகுகளில் சென்று விடுதலைப் புலிகள் பிரச்சினை ஏதுமின்றி இத்தாக்குதல்களை நடத்தியிருக்க முடியும் என்றும் கடற்படை அதிகாரிகள் கூறினார்கள்.

இந்திய மீன்பிடிப் படகுகள் மீது தாக்குதல் நடத்தும் திறமையும் நிபுணத்துவமும் விடுதலைப் புலிகளுக்கு உள்ளன—என்று கூறிய பாதுகாப்பு பகுப்பாய்வாளர் விடுதலைப் புலிகள் சிறிய இந்திய ரோந்துப் படகு ஒன்றின் மீது தாக்குதல் நடத்த சாத்தியம் இருப்பது பற்றியும் சுட்டிக் கூறினார்.

#### புலிகள் வெற்றி

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தும் முயற்சியிலும் உபாயத்திலும் தான் விடுதலைப் புலிகள் தற்போது ஈடுபட்டுள்ளதாகவும் பகுப்பாய்வாளர்கள் கூறினார்கள்.

இலங்கை அரசு மீது நடவடிக்கை எடுக்க இந்தியாவை நிர்ப்பந்திக்கும் நோக்கில் இந்திய மீனவர் மீது கடற்புலிகள் தாக்குதல் நடத்துவதில் ஈடுபட்டிருப்பதாக பகுப்பாய்வாளர்கள் நம்புகின்றனர்.

#### கூட்டு கடல் ரோந்து இந்தியா பின்னடிப்பு

இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்கு ஒரே வழி இலங்கையும் இந்தியாவுடன் கூட்டாக கடல் ரோந்தை மேற்கொள்வதேயாகும்.

இதற்கு இலங்கை தயாராக உள்ளது ஆனால் இந்தியா கூட்டு ரோந்து பற்றி தனது நிலையை வெளிப்படுத்தவில்லை.

இலங்கைக் கடலில் இந்திய மீனவர் மீன்பிடிப்பதை இந்தியா விரும்புவதாலேயே இந்தியா கூட்டுக் கடல் ரோந்தில் ஈடுபட மறுத்துள்ளதற்குக் காரணம் என்று இலங்கை அதிகாரிகள் நம்புகின்றனர்.

இலங்கைக் கடலில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதை இடைநிறுத்தி வைப்பதன் மூலம் இந்தியா பல பிரச்சினைகளுக்கு முடிவுகட்ட முடியும்.

இப்படி இடைநிறுத்தி வைக்கமுடியாத விடத்து அது பாரிய பாதுகாப்பு மற்றும் அரசியல்பிரச்சினைகளை உருவாக்குவதற்கு விடுதலைப் புலிகளுக்கு உதவும்.

இந்திய மீனவர்மீதும் இறுதியில் இந்திய கடற்படை படகு மீதும் கடற் புலிகள் தாக்குதல் நடத்தும் பட்சத்தில் என்ன நடக்கும்?

இலங்கைக் கடலில் மேலும் இடம்பெறும் சம்பவங்கள் பதற்றத்தையே அதிகப்படுத்தும். இறுதியில் வெற்றி விடுதலைப் புலிகளுக்கே என்று பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்திய மீன்பிடிப் படகுகள் கடப்பட்ட விவகாரத்தைத் தொடர்ந்து யுத்தம் புதிய கட்டத்துக்குள் பிரவேசித்துள்ளது என்று பகுப்பாய்வாளர்கள் கூறுகின்றனர்.

—இவ்வாறு "சண்டே ஐலண்ட்" கட்டுரையில் ஷமிந்திரா பெர்டினண்டோ தெரிவித்துள்ளார். (உ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஒக். 20

மட்டக்களப்பு மாவட்டம் வாவற்கொடிச்சேனைப் பகுதியில் நடந்த சண்டையில் ஸ்ரீலங்கா இராணுவமும், ரெலோ குழுவினரும் பதுங்கியிருந்து தாக்குதல் நடத்தியதில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளரான எட்வேர்ட் மாஸ்டர் (இருதயபுரம் - மட்டக்களப்பு) என்பவர் வீரச்சாவடைந்தார். (ந)

அரசியல்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்களைத் தந்துதவுங்கள்'' — என்று இராணுவத் தளபதி சொன்னார்.

''விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் ஈடுபடுத்த கூடுதல் படையினரைத் திரட்ட வேண்டும் என்று கருதுகிறீர்களா?'' என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''மேலதிக படையினர் தேவை என்று நான் எப்போதும் தெரிவித்து வருகின்றேன்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவிடமும் இதைத் தெரிவித்தேன். இது பலனளிக்கவில்லை. ஆனால் ஜனாதிபதி விஜேதுங்கா இது குறித்து மிகவும் சாதகமாக இருக்கிறார். தளபதியாக இருந்த போது ஜெனரல் வனசிங்காவும் கூடுதல் துருப்புகள் தேவை என்றே கூறினார்.''— என்றார் அவர்.

''இராணுவ நிலைவரத்தில் ஸ்திரமின்மையை ஏற்படுத்தி அதில் பிளவை உருவாக்குவதில் தேசாபிமானமற்ற சக்திகள் இரகசிய உபாயங்களை மேற்கொள்கின்றனர். இது நாட்டைப் பிரிக்க வேண்டும் என்று கோரும் ஈழவாதிகளுக்கே உதவும்'' — என்றும் தளபதி சொன்னார்.

கட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றில் உயிரிழப்புகள் அதிகமாக இல்லையா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

'யுத்தத்தில் உயிரிழப்புகள் எதிர்பார்க்கப்பட வேண்டியவை; ஆனால் அதனை குறைந்தபட்சமாக வைத்துக் கொள்ள வேண்டும். இதுவரை 8 ஆயிரத்து 500க்கு அதிகமான படையினர் உயிரிழந்துள்ளனர்'' என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-எ)

## வடமராட்சி கடலில் தாக்கு

தெல்லிப்பழை, ஒக். 20

வடமராட்சிக் கடற்பகுதியில் நேற்றும் கடற்படையினர் பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்றுக் காலை 6-30 மணியளவில் வடமராட்சிக் கடற்பகுதியில் ரோந்து சென்ற கடற்படையினர் வல்வெட்டித்துறை, பொலிகண்டி, பருத்தித்துறை முனைப் பகுதிகளில் பீரங்கி மற்றும் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டனர்

இப்பகுதிகளில் கரையோரப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கியே இத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. வடமராட்சிக் கடலில் கடற்படையினர் அடிக்கடி மீனவர் மீது தாக்குதல் நடத்தி வருவது தெரிந்ததே. (ஆ-109-155)

ராணுவத்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களனை, மட்டக்குளி ஆகிய பகுதிகளில் இவர்கள் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் தற்கொலைத் தாக்குதல் படைப்பிரிவினர் அணிந்து கொள்ளும் — குண்டு பொருத்தப்பட்ட 'டெனிம்' அங்கி — இதற்காகவே கொழும்புக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதைத்தவிர, இதுபோன்ற மூன்று அல்லது நான்கு குண்டு உடைகள் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

கடற்படைத் தளபதியைக் கொலை செய்தது போல — வாகனத்தை மோதவிட்டு, அல்லது வாகனத்தை வெடிக்க வைத்து இராணுவத் தளபதியைக் கொல்லவும் திட்டமிடப்பட்டிருக்கிறது

வேறொரு தலைவரைக் கொலை செய்ய முயற்சிப்பது போல வெளியே காட்டிக் கொண்டு, இராணுவத் தளபதியை கொலை செய்யும் தந்திர முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

— இவ்வாறு ''லக்திவ'' செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (உ-9)

# புலிகளுடன் தொடர்புடைய சிங்கள இளைஞர் கைதாக

கொழும்பு, ஒக். 20

விடுதலைப் புலிகள் இயக்க நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் கவனியைச் சேர்ந்த சிங்கள இளைஞர் ஒருவரை பொலீஸார் கைது செய்தனர்.

அவரது வீட்டில் இருந்து 27 சுற்று ரவைகளுடன் கூடிய வெளிநாட்டுத் தயாரிப்பான ரி-56 ரைபிள் ஒன்றும் ஏழு கை எறி குண்டுகளும் 40 சுற்று வெடி மருந்துகளும் விசேஷ பொலீஸ் குழுவினரால் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

## அம்பாறையில் தேடுதல்

அம்பாறை மாவட்டத்தின் பலகுதிகளிலும் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த சில காலமாக திருக்கோவில், ஆலையடிவேம்பு, காரைதீவு, கல்முனை ஆகிய இடங்கள் உட்பட பல பிரதேசங்கள் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதல்களின் போது கைது செய்யப்படுபவர்கள் அருகிலுள்ள படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

## பொருள்கள் ஏற்றியோருக்கு அழைப்பு

நேற்று பருத்தித்துறைக்கு வந்து சேர்ந்த 'காதலி' கப்பல் மூலம் பொருள்களைத் தருவித்திருக்கும் தனிப்பட்டவர்கள் பொருள்களை கப்பலில் ஏற்றியமைக்கான சான்றிதழ், பொருள் விவரப் பட்டியல் மற்றும் ஆவணங்களுடன் இன்று முற்பகல் 9 மணிக்கு அலுவலகத்தில் தம்மை வந்து சந்திக்குமாறு யாழ் செயலக திட்டப்பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் அறிவித்துள்ளார்.

## காவேரி நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ் இலக்கிய வட்டத்தின் ஆதரவில், கவிஞர் கலாநிதி காரை சுந்தரம்பிள்ளையின் ''காவேரி'' நூல் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது

யாழ் இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நாளை வியாழக்கிழமை 3.30 மணிக்கு ஆரம்பமாகும் வெளியீட்டு விழாவுக்கு இலக்கிய வட்டத்தின் தலைவரும் மாவட்டப் பிரதி ஆணையாளருமான திரு. த. வைத்திலிங்கம் தலைமை வகிப்பார்.

ஆசியுரையை திரு. ஆ. சபாரத்தினமும், வெளியீட்டுரையை திருமதி. கோகிலா மகேந்திரனும், மதிப்புரையை திரு. க. சொக்கலிங்கமும், சிறப்புரையை பேராசிரியர் கா.சிவத்தம்பியும் நிகழ்த்துவர் முதற்பிரதியை திரு க.சோமசேகரம் பெறுவார்.

அரச--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

போர் மற்றும் இராணுவ தளபாடங்கள் விரைவில் கொள்வனவு செய்யப்படவிருப்பதாகவும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு எஞ்ஜின்கள் பொருத்தப்பட்ட இந்த ரக ஹெலிக்கொப்டர்கள் முன்னாள் சோவியத் யூனியனில் தயாரிக்கப்பட்டவையாகும்.

வார்சோ அணி நாடுகளின் படைகளினால் இவை பயன்படுத்தப்பட்டு வந்தன.

பல விமானப்படைகளினால் தற்போது உபயோகிக்கப்பட்டு வரும் இவ் வகை ஹெலிக்கொப்டர்கள் மிகப் பெரிய போக்குவரத்து ஹெலிகளாகும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிதாக வாங்கப்படும் 3 ஹெலிகளுடன் இலங்கை விமானப்படையில் உள்ள எம் ஐ - 17 IV ஹெலிகளின் எண்ணிக்கை ஆறாக அதிகரிக்கும்

கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து சிறு ரக ஆயுதங்கள் வெடிமருந்துகள் ஆகியவற்றையும் அதிக அளவில் இலங்கை வாங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

ரஷ்யா உட்பட முன்னாள் சோவியத் குடியரசுகளும் குறைந்த விலையில் பீரங்கி ஏவுகணைப் படகுகள் மற்றும் சப்மரீன்கள் ஆகியவற்றை விற்க முன்வந்துள்ளன என்றும் ''சண்டே ஐலண்ட்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புத் தேவைகளுக்காக போர்த்தளபாடங்கள், பயிற்சி மற்றும் வசதிகளை கிழக்கு ஐரோப்பிய நாடுகளிடம் இருந்து பெறுவது கஷ்டமான பணி அல்ல. ஆனால் அவற்றை மலிவான விலைக்கு [illegible] நிலையாகும் [illegible] வர்கள். [உ-எ]

## மகனை ஒப்படைத்த தந்தை

யாழ்ப்பாணம், ஒக். 20

முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணியில் கடந்த சனியன்று நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கின் போது அதே இடத்தைச் சேர்ந்த மாலுப்பிள்ளை என்பவர் தனது மகனை விடுதலைப் போராட்டத்தில் ஒப்படைத்தார். (உ-ந)

புலிகளுடன் தொடர்பு:

## பல அரச உயரதிகாரிகளும் விசாரணைக்கு உள்ளாவர்

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவானவர்கள் என்று சந்தேகிக்கப்படும் அரச உயர் அதிகாரிகள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் முதல் நிலை ஊழியர்கள் பலர் விசாரணைக்கு உட்படுத்தப்படவிருக்கின்றனர்.

இத்தகவலை கொழும்பு இரகசியப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்ததாக 'திவயின' சிங்கள வார இதழ் வெளியிட்டிருக்கிறது

விசாரணைக்கு உட்படுத்தப் படவிருப்பவர்களின் பட்டியலில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவிற்கு நெருக்கமான உயர் அரச அதிகாரிகளும் இடம் பெற்றுள்ளனராம். (உ-9)

மீனவர் விவகாரம்:

# இந்தியா - இலங்கை விரைவில் உடன்பாடு?

பாக்குநீரிணையில் இலங்கை — இந்திய மீனவர்கள் எல்லை தாண்டிச் சென்று மீன்பிடிப்பது தொடர்பான பிரச்சினைக்கு தீர்வு காணுவது குறித்து இந்தியாவும் இலங்கையும் விரைவில் உடன்பாடு ஒன்றைச் செய்யவுள்ளன.

இதேவேளை —

இந்திய - இலங்கை கூட்டு ஆணைக்குழுவின் அடுத்த கூட்டம் இவ்வருட முடிவுக்குள் நடத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக் கழக அனுமதி:

# மானிய ஆணைக்குழுவின் புதிய தலைவர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஒக். 20

1992 – 93 கல்வியாண்டிற்கு யாழ். பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை தெரிவு செய்த முறையினால் மாணவர்கள் பெரும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் —

இந்த முறையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் —

யாழ். பல்கலைக் கழக பதிவாளர் திரு வே. பரமேஸ்வரன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் புதிய தலைவரான பேராசிரியர் லெஸ்லி பண்டிதரத்தினாவிடம் கேட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் புதிய தலைவரை கடந்த வியாழக்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்திய பதிவாளர், நேற்று யாழ்ப்பாணம் திரும்பினார்.

யாழ். பல்கலைக்கழக மூதவை இது விடயமாக மேற்கொண்ட தீர்மானத்தை அவரிடம் சமர்ப்பித்து இந்த தெரிவால் மாணவர்கள் எதிர்நோக்கியுள்ள பாதிப்புக் குறித்து பரமேஸ்வரன் விளக்கிக் கூறினார்.

இது தொடர்பாக தாம் கல்வி, உயர்கல்வி அமைச்சருடன் பேச்சு நடத்தி ஆவன செய்வதாக ஆணைக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

இதே வேளை —

கொழும்பில் தற்சமயம் தங்கியுள்ள யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, மாணவர் அனுமதி விவகாரம் சம்பந்தமாக அமைச்சர் மற்றும் மானிய ஆணைக்குழுத் தலைவர் ஆகியோருடன் பேச்சு நடத்தவிருந்தார் எனத் தெரிய வந்தது.

இந்த விடயம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூலம் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பவும் முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் தொண்டமானிடமும் தமிழ் மாணவருக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து விளக்கமான மகஜர் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ராஜீவ்,..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரும் இவ் வழக்கு விசாரணையில் (பெரிதாக ஏதும் முன்னேற்றம் இல்லை) என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

இவ் வழக்கின் சந்தேக நபர்களான ஆதிரை என்ற பெண்ணும் விக்கேஸ்வரன் என்பவரும் தங்களைத் திருமணம் செய்ய அனுமதிக்குமாறு சிறை அதிகாரிகளைக் கேட்டுள்ளனர்.

அதே சமயம் -

மற்றொரு சந்தேக நபரும் ஆதிரையின் பாதுகாவலர் என்று தம்மைக் கூறிக் கொள்பவருமான கனகசபாபதி என்பவர் இத்திருமணத்தை நிறுத்துமாறு பூந்தமல்லி நீதிமன்றத்தில் மனு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

கைதிகளிடையே திருமணம் நடப்பதை சிறைச்சாலை விதிகள் தடுப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

சர்வதேச --

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றது. ஆயினும் எனது அரசுக்கு விடுதலைப் புலிகளுடன் எந்த விதத் தொடர்பும் இல்லை.

நாட்டின் அரசியல் சாசனக் கட்டமைப்புக்கு உட்பட்ட வகையில் நடத்தப்படும் பேச்சுவார்த்தை வாயிலான தீர்வு குறித்த யோசனையை நாக எதிர்க்கவில்லை—என்று பிரதமர் மேலும் கூறினார். (ஒ-எ)

## அரசு மீது குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் அவயவங்களை இழந்த படையினருக்கு வழங்கும் என்று கோரப்பட்ட முச்சக்கர வண்டிகள் என்பவற்றுக்கான பணம் அவர்களின் சம்பளத்திலிருந்தே அறவிடப்படுவதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இவர்களுக்கு இலவச உதவிகளை வழங்க சிங்கள செல்வந்தர்களும் பொது அமைப்புகளும் அன்பளிப்புகளை வழங்கினாலும், ஸ்ரீலங்கா அரசு அதனைப் பெற்றுக் கொண்டு படையினரின் சம்பளத்திலிருந்து பணத்தை அறவிடுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## வாதுவவுக்கு சமீபமாக ''டோரா''க்கள்

பருத்தித்துறைக் கடற்பரப்பில் நேற்று மாலை கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டது.

''காதலி'' கப்பல் பருத்தித்துறை கடற்பரப்பில் தரித்து நின்றவேளையிலும் —

கப்பலுக்குச் சமீபமாகவும் இரண்டு டோரா பீரங்கிப் படகுகள் சென்றன.

வெற்றிலைக்கேணிப் பக்கமாக இருந்து காங்கேசன் துறையை நோக்கி 'டோரா' படகுகள் இரண்டும் சென்றன. அவை பீரங்கித் தாக்குதலை மேற்கொள்ளக் கூடும் என்று இறங்குதுறையிலும், அதற்குச் சமீபமாகவும் நின்ற மக்கள் அஞ்சினர். ஆனால் எவ்வித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. (அ-87-109)

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு சின்னத்தம்பி

சங்கரத்தையைச் சேர்ந்த முருகேசு சின்னத்தம்பி நேற்று (19 10 93) காலமானார்

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், Dr. சிறிதரன் (U.S A), திருமதி சிறிரஞ்சனி சாந்தகுமார் (Canada), செல்வி யசோதினி (Madras) ஆகியோரின் அன்புத் தந்தையும், சாந்தகுமாரின் (Canada) மாமனாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 20-10-93 காலை 9 00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாற்று மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மகேஸ்வரி
(மனைவி)

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை.

(இ/6429)

## கதிரவேலு கந்தையா

### ஆச்சாரியார்

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் திருகோணமலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான கதிரவேலு கந்தையா ஆச்சாரியார் 16 - 10 - 93 இல் திருகோணமலையில் காலமானார்.

அன்னார் யோகம்மாவின் அன்புக்கணவரும், தயாளசிங்கம் (பிரான்ஸ்), நல்லலிங்கம் (லண்டன்), காலஞ்சென்ற தேவராணி (வட்டுக்கோட்டை), தேவகுலசிங்கம் (திருமலை இ போ.ச), வசந்தகுமார் (லண்டன்), சோதிலிங்கம் (திருநெல்வேலி), சற்குணதேவி (திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற சபாபதி (சுழிபுரம்), சின்னையா (சுழிபுரம்), காலஞ்சென்ற செல்லம்மா (சுழிபுரம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சபாபதி கந்தசாமி ஆச்சாரி (திருநெல்வேலி), சிவபாக்கியம் (அரியாலை), சிவரத்தினம் (திருநெல்வேலி), பராசக்தி (திருநெல்வேலி), தம்பப்பொன் (இளைப்பாறிய ஆசிரியை, திருநெல்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கார்த்திகேசு (ஆனைக்கோட்டை), இராசநாயகம் (திருநெல்வேலி), கனகாம்பிகை (திருநெல்வேலி) ஆகியோரின் சகலனும், திருமதி தயாளசிங்கம் (பிரான்ஸ்), திருமதி நல்லலிங்கம் (லண்டன்), திருமதி தேவகுலசிங்கம் (திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்.

இறுதிக் கிரியைகள் 18-10-93 இல் திருமலையில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
செல்வி. சபாபதி தம்பப்பொன்

தலங்காவற் பிள்ளையார் கோவிலடி,
திருநெல்வேலி.

(27714)

இப்பத்திரிகை திரு. கதிரவேலு வெளியீட்டாளர் (பிறைவேட்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் [illegible] இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-10-1993 [illegible] வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org